
K.M.G. COLLEGE OF ARTS AND SCIENCE
(AUTONOMOUS)
R.S. ROAD, AMMANANGKUPPAM, GUDIYATTAM – 635 803.
Approved by Govt. of Tamilnadu & Permanently Affiliated to Thiruvalluvar University
Recognized under section 2(f) and 12(B) of the UGC Act, 1956
Accredited by NAAC with 'A' GRADE (CGPA of 3.24/4 – 2nd Cycle)
Phone: 04171- 227906, 227306,229206 Email: kmgcollege@gmail.com Website: www.kmgcollege.edu. In

**தேதி**: 25.06.2025

# நுண்கலை மன்றம்

## இளநிலை முதலாம் ஆண்டு வகுப்புகள் துவக்க விழா







கே. எம். ஜி. கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 2025–26 ஆம் கல்வி ஆண்டிற்கான இளநிலை முதலாம் ஆண்டு வகுப்புகள் துவக்க விழா, 23.06.2025 திங்கட்கிழமை அன்று காலை 10.15 மணியளவில் கே. எம். ஜி. கலை அரங்கில் நடைபெற்றது. கல்வி நிறுவனங்களின் நிர்வாக பெருமக்கள் மற்றும் கல்லூரியின் முதல்வர் முன்னிலையில், அனைத்து துறைகளின் துறைத் தலைவர்கள், பேராசிரியர் பெருமக்கள் கலந்து கொண்டு, வந்திருந்த முதலாம் ஆண்டு மாணவர்களை வரவேற்று இனிப்புகள் வழங்கினர்.

K.M.G. COLLEGE OF ARTS AND SCIENCE
(AUTONOMOUS)
R.S. ROAD, AMMANANGKUPPAM, GUDIYATTAM – 635 803.
Approved by Govt. of Tamilnadu & Permanently Affiliated to Thiruvalluvar University
Recognized under section 2(f) and 12(B) of the UGC Act, 1956
Accredited by NAAC with 'A' GRADE (CGPA of 3.24/4 – 2nd Cycle)
Phone: 04171- 227906, 227306,229206 Email: kmgcollege@gmail.com Website: www.kmgcollege.edu. In

தேதி: 12.07.2025

# நுண்கலை மன்றம்

## வேலூர் சிப்பாய்ப்புரட்சி நினைவு தின போட்டிகள்






**10/07/2025** அன்று தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் மற்றும் கலைஞர்கள் சங்கம் ஆக்சிலியம் கல்லூரி வரலாற்று துறை மற்றும் வேலூர் வாசிப்பு இயக்கம் இணைந்து நடத்தும் கல்லூரி மாணவர்களுக்கான வேலூர் சிப்பாய் புரட்சி நினைவு தின போட்டிகளில் நம் கல்லூரியைச் சார்ந்த மாணவர்கள் கட்டுரைப் போட்டி, ஓவியப் போட்டி, கவிதைப் போட்டி, பேச்சுப்போட்டி ஆகிய போட்டிகளில் கலந்துக்கொண்டு சான்றிதழ்களையும் பரிசினையும் பெற்று நம் கல்லூரிக்கு பெருமை சேர்த்தனர். இம்மாணவர்களை நிர்வாக பெருமக்கள் கல்லூரி முதல்வர் பேராசிரியர்கள் நுண்கலை மன்ற உறுப்பினர்கள் அனைவரும் பாராட்டி மகிழ்ந்தனர்.

தேதி: *17.07.2025*

## நுண்கலை மன்றம்

## இளையோர் இலக்கிய பயிற்சிப் பாசறை







**15/7/2025** அன்று இளையோர் இலக்கிய பயிற்சிப் பாசறை வேலூர் மாவட்டத்தில் உள்ள ஊரிசு கல்லூரியில் நடைபெற்றது இப்பயிற்சி பாசறையில் நம் கல்லூரியைச் சார்ந்த மாணவர்கள் கலந்துக் கொண்டு சான்றிதழ்களையும் பரிசினையும் பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்தனர். கல்லூரியின் நிர்வாக பெருமக்கள், முதல்வர், பேராசிரிய பெருமக்கள், துறை சாரா பேராசிரியர்கள், நுண்கலை மன்ற ஒருங்கிணைப்பாளர் மற்றும் உறுப்பினர்கள் பாராட்டி மகிழ்ந்தனர்.

K.M.G. COLLEGE OF ARTS AND SCIENCE
(AUTONOMOUS)
R.S. ROAD, AMMANANGKUPPAM, GUDIYATTAM – 635 803.
Approved by Govt. of Tamilnadu & Permanently Affiliated to Thiruvalluvar University
Recognized under section 2(f) and 12(B) of the UGC Act, 1956
Accredited by NAAC with 'A' GRADE (CGPA of 3.24/4 – 2nd Cycle)
Phone: 04171- 227906, 227306,229206 Email: kmgcollege@gmail.com Website: www.kmgcollege.edu. In

**தேதி: 19.07.2025**

# நுண்கலை மன்றம்

## கே. எம். ஜி. கல்வி நிறுவனரின் 106வது பிறந்தநாள் விழா




**17.07.2025** அன்று, நம் கல்லூரியின் சார்பாக, கே.எம்.ஜி. கல்வி நிறுவனரின் **106**வது பிறந்தநாள் விழாவைபோற்றும் வகையில், திருக்குறள் ஒப்புவித்தல், கவிதை, கட்டுரை, ஓவியம் உள்ளிட்ட இலக்கியத்துறையை சார்ந்த பல்வேறு போட்டிகள் நடைபெற்றன. இப்போட்டிகளில் அனைத்து துறைகளிலுமிருந்து மாணவர்கள் உற்சாகமாக பங்கேற்று, பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை பெற்றனர். நிகழ்ச்சியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு கல்லூரி முதல்வர் பரிசுகளையும் சான்றிதழ்களையும் வழங்கினார். இந்நிகழ்ச்சியை ஒருங்கிணைப்பாளரும் மன்ற உறுப்பினர்களும் சிறப்பாக ஒருங்கிணைத்தனர்.

K.M.G. COLLEGE OF ARTS AND SCIENCE
(AUTONOMOUS)
R.S. ROAD, AMMANANGKUPPAM, GUDIYATTAM – 635 803.
Approved by Govt. of Tamilnadu & Permanently Affiliated to Thiruvalluvar University
Recognized under section 2(f) and 12(B) of the UGC Act, 1956
Accredited by NAAC with 'A' GRADE (CGPA of 3.24/4 – 2nd Cycle)
Phone: 04171- 227906, 227306,229206 Email: kmgcollege@gmail.com Website: www.kmgcollege.edu. In

தேதி: 17.08.2025

# நுண்கலை மன்றம்

## தொன் போஸ்கோ கல்லூரியின் முத்தமிழ் விழா






திருப்பத்தூர் மாவட்டம் ஏலகிரி மலையில் அமைந்துள்ள தொன்போஸ்கோ கல்லூரி, தமிழ்த் துறைச் சார்பில் முத்தமிழ் விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் தனிநபர் பாடல், குழு பாடல், குழு நடனம், பேச்சுப்போட்டி, தமிழோடு விளையாடு, இசைக்கருவி வாசித்தல், முக ஓவியம், திருக்குறள், குறும்படம், மௌன நாடகம் ஆகிய எட்டு போட்டிகள் நடத்தப்பட்டன.

இப்போட்டிகளில் நம் கல்லூரியின் மாணவர்கள் சுமார் **64** பேர் பங்கேற்று, நான்கு போட்டிகளில் முதலிடம், இரண்டு போட்டிகளில் இரண்டாம் இடம் பெற்று, ஒட்டுமொத்த சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்று, நம் கல்லூரிக்குப் பெருமை சேர்த்தனர்.

இந்த வெற்றியை பெற்ற மாணவர்களை கல்லூரி நிர்வாகப் பெருமக்கள், முதல்வர், பேராசிரியர்கள், நுண்கலை மன்ற உறுப்பினர்கள் மற்றும் துறை சாரா பேராசிரியர்கள் அனைவரும் பாராட்டினர்.